

# உரைமுரசு

பதிப்பாசிரியர்

முனைவர் பா.அருள்ஜோதி

NCBH

# உரைமுரசு

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

ISBN 978-81-2343-943-3
9 788123 439433
Code No. A4296 ₹ 65.00

Language: Tamil

**Urai Murasu**

Author: **Dr. B. Aruljothi**

First Edition : December, 2019

Copyright : Publisher

No.of Pages : 76

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN. 978 - 81 - 2343 - 943 - 3

Code No. A 4296

**₹ 65.00**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906 **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452 2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil**

**உரை முரசு**

பதிப்பாசிரியர் : முனைவர் பா. அருள்ஜோதி

முதல் பதிப்பு : டிசம்பர், 2019

*அச்சிட்டோர்:* **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# பொருளடக்கம்

1. தமிழுக்குத் தடம் கண்ட தொல்காப்பியம் 7
   *-முனைவர் பொ. மா. பழனிசாமி*

2. எட்டுத்தொகை நூல்களில் நிர்வாகத் திறன் 12
   *- முனைவர் இரா. விஷ்ணுபிரியா*

3. காப்பியங்கள் காட்டும் தனிமனித வாழ்வியல் 21
   *- முனைவர் ந. பிரகாஷ்*

4. தமிழர்களின் மரபுவழி விழாக்கள் 29
   *- முனைவர் ம. சித்ரகலா*

5. தமிழ் இலக்கியத்தில் கோயிற்கலை 39
   *- பேரா. அ. மகபூபு*

6. வேளாண்மையில் மரபும் மாற்றமும் 45
   *- முனைவர் இரா. ஜெயந்தி*

7. தற்கால இலக்கியங்களில் தலித்தியம் 54
   *-முனைவர் பே. மகேஸ்வரி*

8. நவீன ஊடக விளம்பரங்களின் நோக்கும் போக்கும் 60
   *- ர. சூர்யா*

9. சிறுகதைகள் சித்திரிக்கும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் 65
   *- முனைவர். த. கீதாஞ்சலி*

# 2. எட்டுத்தொகை நூல்களில் நிர்வாகத்திறன்

- முனைவர் இரா. விஷ்ணுபிரியா

அறிவியல் வளர்ச்சியால் உலகம் வேகமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக்கிணங்க இன்று இளைஞர்கள் பலரும் கடல் கடந்து பொருள் ஈட்டச் செல்கின்றனர். தனது குடும்பத்தையும், நாட்டையும் முன்னேற்றப் பலரும் முனைகின்றனர். அதில் சிலர்தான் வெற்றி பெறுகின்றனர். இவ்வெற்றிக்கு அடிப்படை ஒன்றே அஃது திட்டமிட்டு நிர்வகிப்பதே ஆகும். பொதுவாகக் குடும்பத்தையும் பொருளாதாரத்தையும், அரசாங்க முறைகளையும் நிர்வகிப்பது சாதாரணமானது அன்று. சாதுர்யமானது. இவற்றை சங்ககால மக்கள் நன்கு அறிந்திருந்தனர். அவற்றை நாம் பயன்படுத்தினோம் எனில் வாழ்வு இன்புறும் என்ற நோக்கில் சங்க இலக்கிய நூல்களான "எட்டுத்தொகை நூல்களில் நிர்வாகத்திறன்" எவ்வகையில் அமைந்துள்ளது என்பதை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

### நிர்வாகம் குறித்த சொல் விளக்கம்

அலுவலகம், ஆட்சியமைப்பு, குடும்பம் என ஒவ்வொரு அமைப்பிலும் நிர்வாகம் பொதிந்துள்ளது. இச் சொல்லிற்குக் "கட்டுப்படுத்தியும் முறைப்படுத்தியும் கவனிக்கும் செயல்பாடு" (ப.624) எனக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் அளித்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி 'நிர்வாகம் பண்ணுதல்' என்ற சொல்லிற்கு பொறுத்தல், ஆளுதல், பராமரித்தல், முடிவு செய்தல், செயல் நடப்பித்தல், வேண்டியபடி ஒன்றைச் சாதித்தல், உறுதிப்படுத்துதல் (ப. 729) என விளக்குகின்றது. நிருவாகம் என்பதற்கு ஆளுகை, பொறுப்பு, மேற்பார்வை, ஓம்புகை (ப. 637) எனத் திருமகள் தமிழகராதியும் விளக்கம் தந்துள்ளது.

### குடும்பமும் நிர்வாகமும்

மனித வாழ்வின் தொடக்கமாவதும், முழுமையானதும் குடும்பம் என்ற அமைப்பாகும். குடும்பத்தின் கணவன் ஈட்டிய பொருளுக்கு ஏற்பச்



செலவு செய்து இல்லறத்தைச் செம்மையாக நடத்துபவள்தான் சிறந்த மனைவியாவாள். அவ்வகையில் தனது தந்தையின் வீடு செல்வச் செழிப்புமிக்க வீடாக இருந்தாலும், தான் திருமணம் செய்து கொண்ட கணவனின் வீடு ஏழ்மையில் இருப்பினும் அதைப் பொருட்படுத்தாது வாழ்க்கையை இன்பமாய்க் கழிக்கின்றாள் ஒரு தலைவி. தேனொடு கலக்கப்பட்ட சுவை மிகுந்த பாலை அருந்தி வளர்ந்தவள் இன்று ஒரு வேளை உணவு உண்டும், ஒரு வேளை உணவு இன்றியும் இருக்கின்றாள். சிறிய விளையாட்டுப் பருவத்தினளாக இருந்தவள் இன்று அறிவும், ஒழுக்கமும் பெற்று துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவளாக எவ்வாறு மாறினாளோ என்று நற்றாயே வியக்கின்றாள். இச் செய்தியினை,

"அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகு நீர் நுணங்கு அறல் போல,
பொழுது மறுத்து உண்ணும் சிறுமதுகையளே"

(நற். 110. 9 - 13)

என்ற அடிகள் தெளிவு படுத்துகின்றன. இன்றைய சூழலில் தன் புகுந்த வீடு வறுமையுற்றால் தன் தந்தையின் வீட்டிற்குச் சென்று தன் கணவரையும் வீட்டோடு மாப்பிள்ளையாக்கும் போக்கினையும் தன்னுடைய சொத்தினைப் பங்கிட்டு வந்து புகுந்தவீட்டில் வாழும் உரிமையும் பெற்று வாழ்கின்றதைப் பார்க்கும்போது இப்போக்கு சங்க இலக்கியத்தில் இடம்பெறவில்லை என்பதையும், இருப்பதை வைத்து குடும்ப வாழ்வை நடத்தியுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.

### தலைவியின் வருகையும் வளர்ச்சியும்

வீட்டிற்கு மருமகள் வரும்பொழுது மகாலட்சுமியே வந்திருக்கின்றாள் என்று நினைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. அவ்வகையில் சங்ககாலத் தலைவன் ஒருவனின் குடும்பம் ஒரு பசுவினை வைத்து அதன் வருவாயில் வாழ்க்கையை நடத்தி வந்தது. பசுஞ்சோறு உண்டால் இராச்சோறு கிடையாது. இச் சூழலில், தன்வீட்டிற்கு மனைவியாக ஒரு தலைவி வரும்பொழுது அவ்வீடு செழுமை அடைந்து செல்வம் நிறைகின்றது என்பதை அறிய முடிகின்றது. இதனை,

"ஓர் ஆன் வல்சிச் சீர் இல் வாழ்க்கை
பெரு நலக் குறுமகள் வந்தென
இனி விழவு ஆயிற்று என்னும் இவ்வூரே"

(குறுந். 295. 4 - 6)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. வரவிற்கேற்பச் செலவு செய்யும் பொழுது குடும்பம் சரியான நேர்கோட்டுப் பாதையில் செல்லும். இல்லையெனில் சருக்கி விழும். இங்கு இத்தலைவியின் பாதையானது குடும்ப முன்னேற்றத்தை அடியொற்றி அமைகின்றது.

**விமர்சிக்காமல் வாழ்தல்**

வாழ்க்கையில் யாரையும் விமர்சித்தல் கூடாது. விமர்சிக்கும் பொழுது தேவையில்லாத சங்கடங்களும், மனக்கசப்புகளும் ஏற்படும். முந்தைய அன்பு குறையும். அவ்வகையில் இங்கு ஒரு தலைவி தம் கணவனோடு ஏற்பட்ட மனவருத்தத்தை எவ்வாறு மறைக்கின்றாள் என்பதை,

"தண்ணம் துறைவன் கொடுமை
நம் முன் நாணிக் கரப்பாடும்மே"

(குறுந். 9 : 7 - 8)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

இதில் பரத்தையின் காரணமாகக் கணவன் பிரிகின்றான். இருப்பினும் தன் கணவனது செயலைத் தலைவி தன் தோழிக்குக் கூறுவதற்கு நாணி மறைக்கின்றாள் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. தங்களுக்குள் ஏற்பட்ட மன வருத்தத்தைப் பிறரிடம் கூற நினைக்காமல் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றாள். பிரச்சினையை சமாளிப்பதும், அதனைச் சரிசெய்ய முயல்வதுந்தான் குடும்ப நிர்வாகத்தின் அடிப்படையாகும் என்பது பதிவாகியுள்ளது. மேலும் தன் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் அடைபட வேண்டிய சில விஷயத்தைப் பூகம்பமாக மாற்றி ஊராரின் சொல்லாடலில் வாழ்க்கையின் பாதையை மாற்றித் தொலைக்கின்றனர். இன்றைய தலைமுறையினர் விவாகரத்து என்னும் சிம்மாசனத்திற்கு அணிவகுத்து முன்னேறிச் செல்லுவதில் முதன்மை பெறுகின்றனர். ஒரு சிறிய தீப்பொறி எரிமலையாக மாறிவிடுவது போல நாம் பேசும் சில விமர்சனங்கள் வாழ்க்கையையே மாற்றிவிடும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதனை, பாரதிதாசனும் நமக்கு எடுத்துரைக்கின்றார்.

"அன்பால் அவளும், அவனும் ஒருமித்தால்
துன்பமவளுக்கெனில்; துன்புறுவான் - துன்பம்
அவனுக்கெனில் அவளும் அவ்வாறே!
இந்தச் சுவைமிக்க வாழ்வைத்தான் தூயோர்
நவையற்ற காதல் வாழ்வென்று கழறினார்"

(குடும்பவிளக்கு பக். 61)



இங்கு அன்பு வெளிப்படுகின்றது. இத்தகைய தலைவியின் அன்பு தலைவனை நல்வழியில் நடத்தும். ஒன்றை அன்பாகச் சொல்லும் பொழுது அச்சொல் ஒரு நாள் வெற்றி பெறும் என்பதன் போக்கு குடும்ப நிர்வாகத்திறனுக்கு அடிப்படையாகும்.

**பொருளாதாரம்**

ஒரு பண்டத்தைக் கொடுத்து அதற்கு மாறாக மற்றொரு பண்டத்தை வாங்கிக்கொள்வதுதான் பண்டைக்கால வாணிகமுறை. தமிழ்நாட்டிலும் இந்த முறைதான் இருந்து வந்தது. இதனாலேயே இந்த வாணிகத்துக்குப் பண்டமாற்று முறை என்ற பெயர் வழங்கப்பட்டு வந்தது.

**கள்ளிற்கு விலையாக யானை**

வேடர்கள் யானை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பெண் யானை காட்டில் பிரிந்து அலறும் வண்ணம், ஆண் கன்றினை அதனின்றும் பிரித்துக் கொண்டு வந்து வெண் கடம்பின் கொழுவிய கொம்பினைப் பிளந்து அதனின்றும் பெரிதாக உரித்தெடுத்த வெண்மையான நார்க் கயிற்றால் அக்கன்றினை இறுகக் கட்டி, நீண்ட கொடிகள் அசையும் தெருக்களைக் கொண்ட பழமையான ஊரின்கண் கள் விற்கின்ற இடத்தில் கள்ளிற்கு விலையாக யானையைக் கொண்டுவந்து கட்டுவர். இதனை,

"கறை அடி மடப்பிடி கானத்து அறை
..... ..... ..... .....
நறவு நொடைநல் இல்புதவு முதற்பிணிக்கும்."

(அகம். 83 : 3 - 8)

என்ற வரிகளால் அறியலாம். அங்காடியில் எந்தக் கடையில் எந்தப் பொருள் உள்ளது என்பதைத் தெரிவிக்க அப்பொருளுக்குரிய கொடிகள் கட்டப்பட்டிருந்தன என்பதையும் அறிய முடிகின்றது. நடமாடும் சிறு வணிகர் தம் பொருளை விற்கும்பொழுது 'நெல்லும் உப்பும் ஒரே விலையாகும் வாங்கிக் கொள்வீராக' என்று சேரிதோறும் சென்று கூவி விற்கும் நிலையையும் (அகம் 390) காண முடிகின்றது. இன்று கொடிக்குப் பதிலாகப் பெயர்ப் பலகைகளும் பிற பயன்பாட்டுப் பொருள்களும் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. இது நிர்வாகத்திற்கான சிறந்த விளம்பர உத்தியாகும்.

**பங்கிட்டுக் கொள்வல்**

வில் ஏந்தியமறவர்கள் வாணிகத் சாத்தரை வீழ்த்தி அவர்களின் அரிய அணிகலன்களைத் திறையாகப் பெற்று, அத்திறைப் பொருள்களை

விற்கள் பொருந்திய அரணிடத்தே அவரவர்க்குரிய பங்குகளாக முறையே பகுத்துக் கொள்வர்.

"விளர் ஊன் தின்ற வீங்கு சிலைமறவர்
..... ..... ..... .....
வில் கெழு குறும்பில் கோள்முறை பகுக்கும்"

(அகம் 89 : 10 -16)

என்ற வரிகளால் இதனை அறியலாம். எதனையும் தங்களுக்குள் சரியாகப் பங்கிட்டுக் கொள்வது நிர்வாகத்தின் சிறப்பாகும். ஊதியத்தையும், வேலையையும் சரியாகப் பங்கிட்டுக் கொடுக்கும் பொழுது, ஒரு நிர்வாகம் வெற்றி பெறும் என்பதில் ஐயமில்லை. இன்று நிர்வாக மேலாண்மை குறித்த படிப்புகள் பெருகியுள்ளது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**மொத்த வாணிபம்**

பொருள் உற்பத்தியாகும் இடத்தில் மொத்த வணிகம் நிகழ்ந்ததும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது, சான்றாக,

"பாடு பல அமைத்து கொள்ளை சாற்றி
கோடு உயர் திணிமணல் துஞ்சும் துறைவ"

(அகம். 30 : 10 - 11)

என்பதைச் சுட்டலாம். பொதுவாக நில வழி வணிகத்தில் வண்டிகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. அவை சகடம் சாகாடு, பாண்டி, பாண்டில் என்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டன. நீர் வழிப் போக்குவரத்திற்குப் பெரிய நாவாய்கள் (மதுரைக் காஞ்சி-83) மரக்கலங்கள் (பெரும். 350), தோணி (புறம் 343 : 6) போன்றன பயன்பட்டன. இவற்றைச் செலுத்துவோர் திமிலர், பெருநீரோச்சுநர் என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. பெரும்பாலும் வண்டிகளை எருதுகளும், கழுதைகளும் இழுத்துச் சென்றன. (அகம் 17, 89).

"இலாப நோக்கில் பொருட்களை வாங்கி விற்கும் தொழில்" என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி வாணிகத்திற்கு விளக்கம் அளிக்கின்றது. இதன்வழி நிர்வாகத்தை வழிநடத்த வாகன வசதியும் இலாப நோக்கும் அவசியம் என்பதை அறிய முடிகின்றது.

**அரசாங்கம்**

பண்டைய காலத்தில் தமிழகம், குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்கள் பல காரணங்களால் பிற நிலங்களோடு போரிட வேண்டிய நிலைமை அடிக்கடி ஏற்பட்டு வந்தது. அதனால் அவ்வந்நிலத்து மக்கள் தம்முள் அறிவாலும், ஆற்றலாலும் சிறந்தவனைத் தம் தலைவனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவன் சொற்படி நடக்கலாயினர், இங்ஙனம் தோன்றிய தலைமையே நாளடைவில் அரசாக வளர்ந்தது.



**குடவோலை முறை** தேர்தல் முறை

அக்காலத்தில் ஆட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுதி உடையவர்களின் பெயர்களை ஓலைகளில் எழுதி மக்கள் அதனை ஒரு மட்கலத்தினுள் போடுவார்கள். அதனை ஆவண மாக்கள் என்போர் அக்குடத்தின் இலச்சினையை நீக்கி ஓலைகளை எடுத்துப் பிரித்துப் படித்து அப்பெயர் கொண்டு வெற்றிபெற்றோரை அறிவிப்பர். இம்முறை குடவோலை முறை எனப்பட்டது. இதனை,

"கயிறு பிணிக்குழிசி ஓலை கொண்மார்
பொறி கண்டு அழிக்கும் ஆவண மாக்களின்"

(அகம். 77 : 7 - 8)

எனக் குறிப்பிடுகின்றது. இன்றைய தேர்தல் முறைக்கு முன்னோடியாகச் சங்ககாலம் அமைந்துள்ளது என்பதைக் காண முடிகின்றது.

ஒரு நிர்வாகத்திற்கான தலைமையைத் தேர்ந்தெடுக்கும் முறை முக்கியமாகக் கருதப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

**வரி வாங்கும் முறை**

ஒரு மாவிற்குக் குறைந்த நிலமாயினும் அதன் கண் விளைந்த காய்ந்த நெல்லை அறுத்துக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாக அது பயன்படும். நூறு வயல்களாயினும் யானை தானே சென்று உண்ணும் பொழுது அதன் வாயில் புகுந்த நெல்லினும் காலடியில் பட்டு அழிவது மிகுதியாகும். அதுபோல அரசன் குடிமக்களிடம் நெறி அறிந்து சிறிது சிறிதாக வரி வசூல் செய்வானாயின் மக்களுக்கும் வருத்தம் நேராது. அவன் நாடு கோடிப் பொருளினை ஈட்டிக் கொடுத்துச் செழிப்படையும் என்றும், குடிகளின் அன்பு கெடக் கொள்ளும் பொருள்தொகுதியை விரும்பினால் அவ்யானை புகுந்த நிலம் போலத்தானும் உண்ணப் பெறாது உலகமும் கெடும் என்றும் பாண்டியன் அறிவுடைநம்பிக்குப் பிசிராந்தையார் அறிவுரை கூறுகின்றார். இதனை,

"காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே

.... .... .... ..... ....

தானும் உண்ணான், உலகமும் கெடுமே"

(புறம். 184 : 1 - 1

ஓர் அரசு நடைபெற வேண்டுமானால் பொது மக்களிடமிருந்து வரிவசூல் செய்தாக வேண்டும். ஆனால் அவ்வரிச்சுமை மிகுந்ததாக இல்லாமல் நியாயமான முறையில் இருக்க வேண்டும் என்பதை அறியும் பொழுது, ஓர் அரசாங்கத்தை நிர்வகிக்க எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என அறிய முடிகின்றது. மேலும் பிசிராந்தையார் போன்ற புலவர்கள் தவறு செய்யும் போது அத்தவறை எடுத்துரைப்பவர்களாக இருந்திருக்கின்றனர். அரசு நிர்வாகத்தில் குறை ஏற்படும் போது அக்குறையை மற்றவர்கள் நிவர்த்தி செய்ய அஞ்சக்கூடாது. ஒரு நிறுவனம் ஆயினும் ஒருவர் செய்யும் தவறை உணர்த்தி அவரை நல்வழிப்படுத்த வேண்டும். இவ்வரி வசூல் ஆனது "தென்றல் காற்றால் பூ தானாக மலர்வது போலவும், பூவில் தேனைத் தேனீ எடுப்பது போலவும் மக்களை வருத்தாமல் வரிவசூல் செய்ய வேண்டுமென சாணக்கியர் கூறியுள்ளார்" (சங்க இலக்கியத்தில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள் ப. 46) என்பதை முனைவர் நயம்பு அறிவுடைநம்பி (க. ஆ) அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**வறுமையை ஒழித்தல்**

தன் நாட்டில் வறுமை இல்லாமையால் இரவலர்கள் தன்னை நாடி வாராவிடினும் அவர்களைப் பெற விரும்பித் தேரை அவர்கள் உள்ள பிற நாடுகளுக்கு அனுப்பி அவர்களைத் தேடிக் கொண்டு வந்து அவர்களுக்கு உணவைத் தரும் பேருள்ளம் கொண்ட ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் சிறப்பை,

"வாரார் ஆயினும் இரவலர் வேண்டி
தேரின் தந்து அவர்க்கு ஆர்பதன்நல்கும்
நசைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்"

(பதிற். 55 : 10 - 12

என்ற அடிகள் விளக்குகின்றன. ஒரு நாட்டில் உள்ள மக்களின் வறுமையைப் போக்கியதோடு மட்டும் நில்லாமல் பிற நாடுகளில் உள்ளவர்களின் வறுமையையும் போக்க நினைப்பது சிறந்ததாகும்.

"வாழ்ந்தவர் எரிந்தார் சுடுகாட்டில்
வாழும் போதே எரிகிறோம்
வயிற்றோடு வாழ்க்கையில்"

(பரிதிப் புன்னகை. ப. 34



என்ற செந்தமிழினியவனின் கவிதையை நாம் உணரும் போது பசிக்கொடுமையால் வயிற்றோடு வாழ்க்கையும் எரித்துக்கொள்ளும் பரிதாப நிலையை மாற்ற அரசாங்கத்தில் சிறந்த நிர்வாகம் அமைய வறுமை ஒழிப்பும் அவசியமாகும்.

**தனித்திறன் அறிதல்**

ஒவ்வொருவரிடமும் தனித்திறமை மறைந்தோ வெளிப்பட்டோ இருக்கும். அதனை ஒருவர் ஊக்குவிக்கும் போது அவர்களுக்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் நடந்து கொள்வார்கள். அத்தகைய அங்கீகாரத்தைத்தான் அனைவரும் விரும்புவர். இத்தகைய நிர்வாகத்திறனுடைய இச்சிந்தனையை ஔவையார் அதியமானுக்கு எடுத்துரைக்கின்றார். இதனை,

"இவற்கு ஈத்து உண்மதி, கள்ளே சினப்போர்

..... ..... ..... ..... .....

உறைப்புழி ஓலை போல
மறைக்குவன் - பெரும நிறகுறித்து வருவேலே"

(புறம். 290 : 1 - 8)

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.

வேந்தே! உன் தந்தையின் தந்தைக்கு இவனுடைய தந்தைக்குத் தந்தை படைக்கருவிகளை எடுத்துப் பகைவர் மேல் எறிந்தழிக்கும் போரில், பகைவர் எறிந்த படைகளை தானேற்று மாண்டான். மறப்போர் புரிந்து புகழ் நிறைந்த வலிமைமிக்க இவனும், மழைத்துளிகள் விழாதபடி காக்கும் பனை ஓலைக் குடைபோல நின் பகைவர் உன்னை நோக்கி எறியும் வேலைத்தான் ஏற்றுத் தாங்குவான். அதனால் கள்ளை முதலில் இவனுக்குத் தந்து பின்பு நீ உண்க என்று கூறுகின்றாள். வீரனாக இருந்தாலும், ஊழியராக இருந்தாலும், அவர்களின் தனித்திறனைப் பாராட்ட வேண்டும் என்பதை இங்கு அறிய முடிகின்றது.

**போர் முறை**

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ்வுலகத்து இயற்கை"

(புறம் : 76 : 1 - 2)

என்பது அனைவரும் அறிந்ததே. இன்று புது வாணிகமாக போர் ஆயுதங்களின் விற்பனைச் சந்தை பெருகியுள்ளது. தரை வழித்தாக்குதல், வான்வழித் தாக்குதல், நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் கடல்வழித்

தாக்குதல், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைத் தாக்குதல் என்று பல்வேறு வழிகளில் குண்டுமழை பொழிவதைக் காணமுடிகிறது. நோயாளிகள், பெண்கள், முதியோர்கள் போன்றவர்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவிப்பதை நாள்தோறும் காண்கின்றோம். இதற்கு மருந்தாக முதுகுடுமிப்பெருவழுதியின் செயல் அமைகின்றது.

"ஆவும் ஆன் இயற்பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
..... ..... ..... .....
அறத்து ஆறு நுவலும் பூட்கை"

(புறம். 9 : 1 - 6)

என்ற பாடல் அடிகள் இதனை எடுத்துரைக்கின்றன. "இப்போர் அறம் சிலப்பதிகாரத்திலும் இடம் பெற்றுள்ளது. பண்டைக் காலத்தில் போர் தவிர்க்க இயலாததாகவும் காலத்தின் தேவையாகவும் விளங்கியது" (பண்டைத் தமிழ் இலக்கியத்தில் அற நெறிகள் ப - 137) என்று வே. முத்துலட்சுமி குறிப்பிடுவதையும் இங்கு உணர வேண்டியுள்ளது.

போர் செய்து பிற உயிர்களைத் துன்புறுத்தாமல் இருத்தல் சிறந்த அறம். போர் நிகழ்ந்தேற வேண்டிய சூழல் உருவாகும் போது. இத்தகைய கொள்கைகளை கடைபிடிப்பது என்பது உயரிய விழுமியம் ஆகும். இதனை அரசாங்கம் சரியாக நிர்வகித்தால் உயிரின் சேதம் குறையும் என்பதை உணர்ந்து கொள்வது அவசியம் ஆகும்.

"உயர்ந்த சிந்தனைகளின் சிறந்த படைப்பே இலக்கியம்" என்பார் அறிஞர் எமர்சன். அவ்வகையில் உயர்ந்த சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பெட்டகமாய்ச் சங்க இலக்கியம் சிறந்து விளங்குகின்றது என்பதை இங்கு உற்றுநோக்க முடிகின்றது.